Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்


சுடர் : 39
கதிர் : 184

செவ்வாய்க்கிழமை
28 மே 2024

முச்சந்தி முரளி



"அப்ப இனி
எலான் மஸ்க்கின்ர
வலைக்குள்ள இலங்கை
விழப்போகுது
கண்டியளோ"



நவநாசிச பாணியில்

# தமிழர் குடித்தொகையை மாற்றியமைக்க முயற்சி!

பேராசிரியர் பத்மநாதன் குற்றச்சாட்டு

**கொழும்பு, மே 28**

**நவநாசிச பாணியில் பல அரசதுறைகள், பலம் பொருந்தியவர்கள் மற்றும் செல்வாக்கு பொருந்தியவர்களுடன் இணைந்து தமிழர் குடித்தொகையை மாற்றியமைப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றது என்று பேராசிரியர் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.**

11

பொலிஸ் ஆடையோடு சென்று

## கத்திமுனையில் நேற்று முல்லையில் கொள்ளை!

முல்லைத்தீவு, மே 28

பொலிஸ் ரீஷேர்ட்டை அணிந்து உள்நுழைந்த மர்ம நபர்கள், வீட்டில் இருந்தவர்களைக் கட்டிவைத்துவிட்டு பணம், மோட்டார்சைக்கிள் என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் முல்லைத்தீவு - மாந்தை கிழக்கில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

11

## அரச அலுவலர்களின் கணக்கெடுப்பு இன்று

கொழும்பு, மே 28

அரச அலுவலர்களைக் கணக்கெடுக்கும் பணி, நாடு பூராகவும் இன்று இடம்பெறவுள்ளது.

எட்டு வருடங்களின் பின்னர் அரச அலுவலர்களை இவ்வாறு கணக்கெடுக்கும் பணி நடைபெறுவதாக புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

11

## புலமைப் பரிசில் விண்ணப்பங்கள்

கொழும்பு, மே 28

புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இணையவழியில் ஏற்றுக்கொள்ளும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

11

தமிழரசின் வழக்கில்

## மாவை, சிறீதரன் இடையே கருத்து முரண்பாடுகளாம்!

யாழ்ப்பாணம், மே 28

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாடு தொடர்பான வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனும், மாவை சேனாதிராஜாவும் வெவ்வேறு சட்டத்தரணிகளுடன் நீதிமன்றில் முன்னிலையாகியதாக ஜனாதிபதி சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

11



## ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது!

ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, மே 28

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கோ அல்லது தற்போதைய ஜனாதிபதிக்கு பதவி நீடிப்பை வழங்குவதற்கோ அரசமைப்பில் இடமில்லை என்று சட்டத்துறைப் பேராசிரியரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்

11

## ஜூன் மத்தியில் ரணில் இந்தியாவுக்குப் பயணம்?

கொழும்பு, மே 28

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜூன் மாதம் மத்திய பகுதியில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்வதற்குச் சாத்தியங்கள் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்திய மக்களவைத் தேர்தல்

11



சிறிலங்காவில்

## ஸ்டார் லிங்க் சேவை: ஏற்பாடுகள் பூர்த்தி!

கொழும்பு, மே 28

உலகப் பணக்காரரும், முதலீட்டாளருமான எலான் மஸ்க்கின், ஸ்டார் லிங்க் இணைய சேவையை இலங்கையில் அறிமுகப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முழுமையடைந்துள்ளன என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ஜனாதிபதி ரணில், யாழ்ப்பாண இளைஞர்களுட

11

கனடாவுக்குப் பயணப்படவிருந்த நிலையில்

## மோ. சைக்கிள் விபத்தில் இளைஞன் உயிரிழப்பு!

சாவகச்சேரி, மே 28

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள், வீதியோர மதிலுடன் மோதியதில், அதில் பயணித்த பால ஞானச் சந்திரன் பருன்ஜன் (வயது - 23) என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணிக்கு, மட்டுவில் முத்துமாரி அம்மன் கோவிலுக்கருகில்

11



## பிரான்ஸின் தூதுவர் கொழும்பில் மர்மச்சாவு

மாரடைப்பு எனச் சந்தேகம்

கொழும்பு, மே 28

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் பிராங்கோயிஸ் கொழும்பில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தூதுவர் பிராங்கோயிஸின் இறப்புக்கான காரணங்கள் வெளியிடப்படவில்லை. அவர் மாரடைப்புக் காரணமாக உயிரிழந்திருக்கலாம் எனவும் உடற்கூற்றுப் பரிசோதனைகள் இடம்பெறவுள்ளதாகவும்

11



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் பயணம் தேர்தல் நாடகமே!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் விசனம்

**வவுனியா, மே 28**

**அடுத்த தேர்தலுக்காக வடக்குப் பயணம் என்ற பெயரில் ஜனாதிபதி தனது கபட நாடகத்தை ஆடிக் கொண்டிருக்கின்றார். தமிழ் அமைச்சரும், சில அரசியல்வாதிகளும் அவர்களுக்குப் போடுகின்ற எலும்புத் துண்டுகளைத் தூக்கிக் கொண்டு ஜனாதிபதிக்கு ஆதரவாகச் செயற்படுகின்றனர் என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத் தலைவி சிவானந்தன் ஜெனித்தா கடுமையாகச் சாடியுள்ளார்.**

வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சென்றிருந்த நிலையில் வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர் ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களாகிய நாங்கள் தொடர்ச்சியான அடக்குமுறைகளுக்குள் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நிலங்கள் தொடர்ந்தும் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன, பௌத்த மயமாக்கல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை வீதியில் திரிகின்ற தெருநாய்களைப் போன்று தங்கள் உறவுகள் எங்கே? எனக் கேட்டவாறு அலைந்து கொண்டிருக்கின்றார்கள்.

முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சிய போது அண்மையில் கிழக்கு மாகாணத்தில் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன. சுகாதாரச் சீர்கேடு எனக் கூறி கஞ்சியைக் காலால் தட்டி கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தவர்களைப் பொலிஸார் கைது செய்தனர். எனினும், வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வீதிகளில், பொலிஸ் நிலையங்களில் எத்தனை வகையான உணவு வகைகள், ஐஸ்கிறீம் போன்றன பரிமாறப்பட்டுக் கொண்டாடப்படும் போது அவர்களுக்குச் சுகாதார விதிமுறைகள் எதுவுமில்லை.

இந்த நாட்டில் தமிழர்களுக்கு ஒரு சட்டம், சிங்களவர்களுக்கு வேறொரு சட்டமாகவுள்ளது. வடக்கு - கிழக்கில் தமிழ்மக்களை அடக்குவதற்காக மிக மோசமான சட்டங்கள் பிரயோகிக்கப்படுகின்றன - என்றார். (ஒ-66)

## பதவிக்கு ஆசைப்படுவோரே முதுகில் குத்தப்பார்க்கின்றனர்

### பொன்சேகா ஆதங்கம்



கொழும்பு, மே 28

பிரதமர் பதவிக்கு ஆசைப்படும் சிலரே கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி புறமுதுகில் குத்தப் பார்க்கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சிக்குள் உள்ள சிலர் பிரதமர் பதவி குறித்து கனவு காண்கின்றனர். மேலும் சிலர் தேசியப் பட்டியலுக்காக போராடுகின்றனர். அமைச்சுப் பதவிகளை எதிர்பார்த்துள்ள சிலரும் இருக்கின்றனர். இவ்வாறு கனவு காண்பவர்கள்தான் கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர்.

இதனை சீர்செய்யாவிட்டால் கட்சியாக முன்னோக்கி பயணிக்கமுடியாது. அது கட்சிக்கே பெரும் பின்னடைவாக அமையும். மக்களுக்கு பரிசுப் பொருள்களை வழங்கி நாட்டை மீட்கமுடியாது. முதுகெலும்புள்ள தலைமைத்துவம் அவசியம். விவாதித்துக்கொண்டு இருப்பதில் பயன் இல்லை. செயலில் தான் காட்ட வேண்டும் - என்றார். (ஒ-44)

## ரூ. 1, 700 வழங்குங்கள் இல்லையேல் வெளியேறுங்கள்!

### பெருந்தோட்ட முதலாளிகளுக்கு ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை



கொழும்பு, மே 28

அரசாங்கத்தின் உத்தரவைப் பின்பற்றித் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா சம்பளம் வழங்குங்கள். இல்லையெனில் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்துவிட்டு தோட்டங்களை விட்டு வெளியேறுங்கள் - இவ்வாறு பெருந்தோட்ட முதலாளிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உலக சந்தையில் தேயிலையின் விலை வீழ்ச்சியடைந்துள்ளமைக்கு தோட்டத்தொழிலாளர்கள் ஒன்றும் செய்ய முடியாது. உடனடியாக தேயிலை உற்பத்தித் தரவுகளையும், திறைசேரி செயலாளரிடம் தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கைச்செலவு பற்றிய தரவுகளையும் பெற்று இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கச்சொல்லுங்கள்.

2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னர் காணப்பட்ட தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கைச்செலவையும் ஒப்பிட்டுப்பாருங்கள். இந்த விடயம் தொடர்பாக ஒரு வாரத்தினுள் என்னிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும் என ஜனாதிபதி அந்த உத்தரவில் குறிப்பிட்டுள்ளார். (எ-25-6)

## அதிகாரியின் விரலைக் கடித்து தப்பியோடிய சந்தேகநபர்!

போதைப்பொருள் விற்பனை தொடர்பாக சோதனையிடச் சென்ற பொலிஸ் பரிசோதகரின் விரலைக் கடித்துவிட்டு சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார்.

ருவன்வெல்ல, அட்டுலுகம பிரதேசத்தில் ஈஸி கேஸ் முறையில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுகின்றார் என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் சோதனையிடச் சென்றபோதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

சந்தேக நபர் , பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள் பட்டியலில் உள்ள ஒருவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். காயமடைந்த பொலிஸ் பரிசோதகர் கரவனெல்ல ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ருவன்வெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

### தமிழக முகாம்களில் உள்ள

## இலங்கை அகதிகளுக்கு மிகவிரைவில் கடவுச்சீட்டு

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், தமிழ்நாட்டிலுள்ள இலங்கை அகதிகளுக்கு இலங்கை கடவுச்சீட்டைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

அண்மையில் சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதரகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் 600 பேர் இலங்கை கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்துள்ளனர். அவர்களுக்குக் கடவுச்சீட்டு வழங்கப்பட்டால் இலங்கைக்கோ வெளிநாடுகளுக்கோ சென்று தமது உறவினர்களை சந்திப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார் என்றும் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். (எ-25-60)

## ஐக்கிய மக்கள் சக்தியை விமர்சிக்கும் பொன்சேகா

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அரசியல் செய்தபோது இருந்த கௌரவம், ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்ட பின்னர் இல்லை என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா. களனியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டவர்களில் ஒருவர் மாவட்டம் முழுவதும் மதுபானம் விநியோகிக்கின்றார்.

இவ்வாறான சம்பவங்கள் நடக்கும்போது கட்சி வீழ்ச்சியடைவதைத் தவிர்க்கமுடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-44)

## புதிய கூட்டணிக்குத் தயாராகும் விமல்!

கொழும்பு, மே 28

நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, ரொஷான் ரணசிங்க மற்றும் தொழிலதிபர் திலித் ஜயவீர ஆகியோர் புதிய அரசியல் கூட்டணியை ஆரம்பிப்பது தொடர்பில் ஆரம்பகட்டக் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தக் கூட்டணியில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் குழு ஒன்றும் இணையவுள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும மற்றும் தயாசிறி ஜயசேகர ஆகியோரையும் இந்தக் கூட்டணியில் இணைத்துக் கொள்வது தொடர்பிலும் ஆலோசிக்கப்படுகின்றது என்றும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து சுயேட்சையாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவையும் இந்தக் கூட்டணியில் இணைத்துக் கொள்வது தொடர்பாக கலந்துரையாடப்படுகின்றது என்றும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்கட்டணத் திருத்தம் மின்சாரசபை மௌனம்

கொழும்பு, மே 28

**மின்கட்டணத் திருத்தம் தொடர்பான முன்மொழிவைச் சமர்ப்பிக்காது இலங்கை மின்சாரசபை தாமதித்து வருகின்றது என்று தகவல் வெளியாகியுள்ளது.**

இந்த முன்மொழிவை எதிர்வரும் முதலாம் திகதி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு மின்சாரசபை சமர்ப்பிக்கவேண்டும் என்றும், இதுவரை அந்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்படவில்லை என்று ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

மின்கட்டணத் திருத்தம் தொடர்பான முன்மொழிவைச் சமர்ப்பிப்பதற்கு மூன்று சந்தர்ப்பங்களில் மின்சாரசபைக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தபோதும், அதற்கு எந்தவிதப் பதிலும் கிடைக்கவில்லை என்றும் அந்த உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, 2023 ஆம் ஆண்டு மற்றும் 2024 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மின்சாரசபை இலாபத்தை ஈட்டியிருந்தது. அந்த இலாபத்தை மின் பாவனையாளர்களுக்கு வழங்குவதற்கு இலங்கை மின்சாரசபை தயங்குவதால், மின் கட்டணத் திருத்த முன்மொழிவைச் சமர்ப்பிப்பதைத் தாமதித்து வருகின்றது என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. (எ-இ)

## போலி ஆவணத் தயாரிப்பு இலங்கையர் ஒருவர் கைது

கொழும்பு, மே 28

போலி ஆவணங்களைத் தயாரித்து மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இலங்கையர் ஒருவர் இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

45 வயதான இவர் இந்திய மத்திய குற்றப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2010ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்ற இவர், 2014 ஆம் ஆண்டு சட்டவிரோதமாக அரச ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தார்.

2016ஆம் ஆண்டு சட்டவிரோதமாக அவர் மீண்டும் இந்தியா சென்று, கர்நாடகா மாநிலத்தில் தங்கியிருந்துள்ளார் என்று இந்திய மத்திய குற்றப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரால் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள், சாரதி அனுமதிப் பத்திரங்கள் என்பவற்றுடன் கைத்தொலைபேசிகள் மற்றும் கைத் துப்பாக்கி என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-இ)

## துப்பாக்கிச் சூடு



கொழும்பு, மே 28

மாத்தறை, வெலிகம பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பத்தேகமவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று நேற்றுக் காலை நடந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும், இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## துஷாரவின் மகன் கைது



கொழும்பு, மே 28

பாதாள உலகக் குழுத் தலைவரான களு துஷாரவின் மகன் உட்பட நால்வர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மாத்தறை குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பிக்வெல்ல பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்களிடம் இருந்து போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகள் கொண்ட பொதி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## வேலை தருவதாகக் கூறி பலரிடம் நிதி மோசடி!

கொழும்பு, மே 28

சுங்கத் திணைக்களத்தில் வேலை பெற்றுத் தரப்படும் என்று தெரிவித்து நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுங்கத் திணைக்களத்தின் நடைமுறைக்குப் புறம்பாக பணியாளர்களை உள்வாங்கமுடியாது என்றும், இது தொடர்பில் மக்கள் மோசடியாளர்களிடம் சிக்கி ஏமாறவேண்டாம் என்றும் சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ-இ)

## சீரற்ற காலநிலையால் 45,509 பேர் பாதிப்பு!

### இதுவரை 9 பேர் உயிரிழப்பு

கொழும்பு, மே 28

சீரற்ற காலநிலையால் நாடளாவிய ரீதியில் 19 மாவட்டங்களைச் சேர்ந்த 45 ஆயிரத்து 509 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

காலநிலை சீரின்மை காரணமாக இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 13 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கடும் காற்றுக் காரணமாக மரங்கள் முறிந்து வீழ்ந்து 12 வீடுகள் முற்றாகவும், 3 ஆயிரத்து 166 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

மேல் மாகாணத்திலேயே அதிகளவானோர் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

அங்கு 28 ஆயிரத்து 350 பேர் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## புதினம் தெரியுமோ?

ஏதும் அலுவல் நடக்கோணும் என்டால் வால் பிடிக்கிறதும், கால்பிடிக்கிறதும் எங்கட அரசியல்வாதி மாருக்கு கைவந்த கலை. ஆனால் தங்கட வால்பிடிப்புக்காக பிழையான விசயத்தை சரி எண்டு பிடிவாதம் பிடிக்கிறதுதான் பிழை. ரண்டு, மூண்டு நாளா ரணிலார் வடக்கு மாகாணத்தைத்தான் 'நாறல் மீனைப் பூனை பாக்கிறமாதிரி' பார்த்துக்கொண்டு சுத்தித் திரிஞ்சவர். ஜனாதிபதி எலக்சனுக்குத் தூண்டில் போடத்தான் ஆள் வந்தவர் எண்டு சின்னப்பிள்ளையளுக்கே நல்லா விளங்கும். அப்பிடி எலக்சன் அலை தன்ர பக்கமா அடிக்குமோ, இல்லையோ எண்டு பாக்க வந்தவருக்கு எங்கட ஆக்கள் வைச்ச ஐஸில ரணிலாருக்கு இத்தறிக்கு குளிர்காய்ச்சல் வந்திருக்கும். அந்தளவுக்கு ரணிலாருக்கு ஆர் கூடுதலா ஐஸ் வைக்கிறது எண்டு எங்கட தமிழ் எம்.பி. மாருக்குள்ள கடும் பிடுங்குப்பாடாம்.

இந்தத் தமிழ் எம்.பி. மார் எல்லாம் வெளியால கடும் தமிழ்த் தேசியம் பேசி, சனங்களை உசுப்பேத்திக் கொண்டே, ஆருக்கும் தெரியாமல் ரணிலாரோடை கொஞ்சிக்குலாவுற வேலையளையும் வலுதிறமாச் செய்துகொண்டிருக்கினம். அதில ஒருத்தர் 'இந்த முறை எங்கட கட்சியை உங்களுக்கு சப்போர்ட் பண்ண வைக்கிறம்' எண்டு வாக்குக் குடுத்திட்டாராம். அதுக்குப் பலனா அவருக்குச் சில சலுகையளும், திட்டங்களும் குடுபட்டதாம். தனக்குமட்டும் இப்பிடி சலுகையள் கிடைச்சால் அது பெரிய பிரச்சினையாகிடும் எண்டதால, தன்னோட சேர்த்து வேற சில எம்.பி.மாருக்கும் சில திட்டங்களை வாங்கிக் குடுத்திருக்கிறார். அவர் எம்.பி.யா இருந்தாலும் அவருக்கு பெற்றோல் செற் தொடக்கம் வேறவேற பிஸ்னஸ் எல்லாம் இருக்கு. அதுகளுக்கு ரணிலாரின்ர சப்போர்ட் கட்டாயம் தேவை. அதாலதான் ஆள், பொது வேட்பாளர் விசயத்தில தமிழரசுக் கட்சிக்குள்ள தன்ர கன்னையில உள்ளவை எடுத்த முடிவுக்குமாறா நிக்கிறார். பொதுவேட்பாளரை நிப்பாட்டி, அதுக்கு தமிழரசுக் கட்சி ஆதரவு குடுத்தால், தமிழ் ஆக்களின்ர வாக்குகள் ரணிலுக்குப் போகாது. இந்தமுறை நாலைஞ்சுபேர் எலக்சனில நிக்கப்போறதால, தமிழ்ச் சனத்தின்ர வாக்குக் கிடைச்சால் அவை ஈஸியா வெண்டிடலாம். ஆனால் பொதுவேட்பாளருக்கு தமிழ்ச்சனம் வாக்களிச்சால், சிங்கள வேட்பாளர் மார் தங்களுக்குள்ள பிடுங்குப்படோணும். அதால தான், தான் கேட்டதெல்லாம் தாறவரை வெல்ல வைக்கத்தானே அந்த எம்.பி. பாடுபடுவார்? அப்ப அவர் பொதுவேட்பாளரை எதிர்க்கத்தானே செய்வார்.

இவ்வளவுநாளும் ரகசியமா இருந்த அவையின்ர உறவு இந்தமுறை ரணில் வந்ததோட எல்லாம் வெட்டவெளிச்சமாகிட்டுது. ஆருக்கெல்லாம் ரணிலோட நெருக்கம் எண்டதை இந்த மூண்டுநாளும் சனம் வடிவாப் பாத்துத்தான் வைச்சிருக்குது. ரணிலைப் பற்றியும், அரசாங்கத்தைப் பற்றியும் மைக்குக்கு முன்னால கண்டபடி பேசிப்போட்டு, அவர் வந்தவுடன கூழைக் கும்பிடுபோட்டு 'அவர் வல்லவர், நல்லவர், இதைச் செய்யிறதுக்கு அவரைவிட்டால் வேற ஆக்களே இல்லை' எண்டெல்லாம் வாளி வைக்கிறவைதான் தமிழ்த் தேசியக் கொள்கைக் குன்றுகளாம். ஆனால், ரணிலோட வைச்சிருக்கிற இரகசிய உறவு வெளியில வந்ததால, இனி அந்த 'நிர்மலமானவர்' போட்ட திட்டமெல்லாம் நிர்மூலம் தான் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமிக்கும் பெண்கள் இலங்கையில் அதிகம்

கொழும்பு, மே 28

**தெற்காசியாவில் வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்களின் சராசரியுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் வங்கிக் கணக்கு வைத்திருக்கும் பெண்களின் எண்ணிக்கை 89 வீதத்தைத் தாண்டியுள்ளமை தெரியவந்துள்ளது.**

இலங்கை மத்தியவங்கியின் கூற்றுப்படி, தெற்காசிய நாடுகளில் சராசரியாக வங்கிக் கணக்கு வைத்திருக்கும் பெண்கள் 65.8 வீதமாகும். அதேசமயம் இலங்கையில் 89.3 வீதமான பெண்கள் வங்கிக் கணக்கு வைத்துள்ளனர்.

பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது வருமானம் கொண்ட 15 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களில் வங்கிக் கணக்குகளை வைத்திருக்கும் இளைஞர்களின் சதவீதம் இலங்கையில் அதிகம் என்று இலங்கை மத்திய வங்கி கூறுகிறது. இது 86 வீதமாக உள்ளது.

இலங்கையின் 15 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையில் 89 வீதமானோர் ஏதாவதொரு வங்கிக் கணக்கைக் கொண்டுள்ளனர், தெற்காசிய நாடுகளில் இது 68 வீதமாகக் காணப்படுகின்றது. குறைந்த நடுத்தர வருமானம் உள்ள நாடுகளில் இது 62 சதவீதமாக உள்ளது.

நிதி நிறுவனங்களில் கணக்கு வைத்திருப்பவர்களில் 32 வீதமானோர் சம்பளம் அல்லது அரசாங்கப் பணம் பெறுவதற்காகவே முதலில் கணக்கைத் திறக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

## கைதையூர் பெருவிழா போட்டி முடிவுகள்

கைதடி பிரதேச சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள், மாதர் கிராம அபிவிருத்திச்சங்கங்கள், கல்விக்கழகங்கள், முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் கைதையூர் பெருவிழாவின் கடந்த வாரம் இடம்பெற்ற போட்டிகளின் முடிவுகள்.

கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தில் நடத்தப்பட்ட கரம் சுற்றுப்போட்டியில் வளர்மதி சன சமூக நிலையமும் குமரநகர் சனசமூக நிலையம் இறுதிப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தன. இறுதிப்போட்டியில் வளர்மதி 2:0 எனும் விகிதத்தில் வெற்றியை பெற்றுத் தொடரைக் கைப்பற்றியது.

சதுரங்கப் போட்டியானது கடந்த வாரம் உதய சூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் குமரன் வி.க., சரஸ்வதி வி.க., குமரநகர் வி.க. ஆகியன சம புள்ளிகளை பெற்றமையால் போட்டியானது வெற்றி தீர்மானிக்க முடியாமல் முடிவுற்றது. முடிவுகள் எய்துவதற்கு ஏதுவாக மீள் போட்டியாக மீளவும் நடத்தப்பட்ட போட்டியில் ஆண்களுக்கான சதுரங்கத்தில் குமரநகர் வி.க. முதலாம் இடத்தைப், பெற்றதுடன் குமரன் வி.க. இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (ஒ-இ)

## இஞ்சி விலை உச்சம்



யாழ்.மாவட்டத்தில் தொடர்ந்தும் இஞ்சியின் விலை உச்சநிலையில் காணப்படுகின்றது என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தின் முக்கியமான சந்தைகளில் ஒன்றான திருநெல்வேலிப் பொதுச் சந்தையில் தற்போது ஒரு கிலோ இஞ்சி 4 ஆயிரத்து 500 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறு தொடர் விலை அதிகரிப்புக்கு, இஞ்சி வரத்துக் குறைந்தமையே காரணமென வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கடும் விலை அதிகரிப்புக் காரணமாக வழமையாக இஞ்சி விற்பனையில் ஈடுபடும் பல வர்த்தக நிலையங்களில் தற்போது இஞ்சி விற்பனையைக் காண முடியவில்லை. சிலவர்த்தகநிலையங்களில் ஒரு கிலோ இஞ்சி 5 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ப-66)

## தமிழ், சைவ பாடங்களுக்குள் குறுக்கப்பட்டுள்ள திருக்குறள்

### லலீசன் ஆதங்கம்

மருத்துவக் கற்கையிலும், முகாமைத்துவக் கற்கையிலும், கல்வியியல் துறைகளிலும் போதிக்கப்படவேண்டிய திருக்குறள் தமிழ் மற்றும் சைவ சமயப் பாடங்களுக்குள் குறுக்கப்பட்டுள்ளது என்று ஆதங்கம் வெளியிட்டுள்ளார் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச. லலீசன்.

குணராஜா நக்கீரன் எழுதிய 'திருக்குறளும் சுக நலமும்' எனும் நூல் வெளியீட்டு விழா யாழ். இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

திருக்குறள் தொடர்பான பார்வையைத் தற்போது பலரும் பல்வேறு கண்ணோட்டத்தில் செலுத்துகிறார்கள். திருக்குறளும் மருத்துவமும், திருக்குறளும் முகாமைத்துவமும், திருக்குறளும் கல்வியும், திருக்குறளும் விவசாயமும் என்று ஒப்பீட்டு ரீதியில் திருக்குறளைப் பார்க்கின்றனர். திருக்குறளில் தங்கள் துறை சார்ந்த செய்திகள் எவ்வாறெல்லாம் சொல்லப்பட்டுள்ளன என்பதைத் தேடுபவர்களின் எண்ணிக்கை தற்காலத்தில் அதிகரித்துள்ளது.

யாழ்.மண்ணும் இதற்குச் சற்றும் தளைத்ததில்லை. ஈழத்தவர்கள் திருக்குறள் மீது மிகவும் ஆர்வம் கொண்டவர்கள். கடந்த நூற்றாண்டில் கோப்பாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை திருக்குறளுக்கென உரை வகுத்தார். அந்தக் காலம் தொட்டு இந்தக் காலம் வரை எங்கள் ஈழதேசம் திருக்குறள் பற்றிய உணர்வுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது. திருக்குறளில் பேசப்படாத விடயங்கள் எதுவுமே இல்லை.

திருக்குறளில் சொல்லப்பட்டுள்ள கருத்துகளை நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் வாழ்வின் மேன்மைக்குரிய கருத்துகளாக எண்ணிக் கைக்கொள்ள வேண்டும் - என்றார். (எ-25-66)



## கோவில் உண்டியல் உடைத்துத் திருட்டு

### சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், மே 28

ஆவரங்கால் பகுதியிலுள்ள சிவன் ஆலயத்தின் உண்டியலை உடைத்து, 15 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தைத் திருடிய இளைஞன், அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஆலயத்தின் உண்டியல் உடைத்துத் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில், [illegible] னால், அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் திருநெல்வேலி பால் பண்ணைப் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ([illegible])

## சந்தேகநபர் கைது

கடந்த 8ஆம் திகதி அஹுங்கல்ல, போகஹாபிட்டிய பிரதேசத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கஹ்பிலியாகந்த பிரதேசத்தில் வைத்து கொஸ்கொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், சந்தேகநபரிடம் இருந்து 3 கிராம் 410 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆனாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், சமாளித்துவிடுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் ஏற்படாது.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குத் தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் வீண் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். மனதில் துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறனும் அதிகரிக்கும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்புத் தருவார். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்பு கரையும். தாய்வழி உறவினர்களுடன் இணக்கமாக நடந்துகொள்வது நல்லது.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். அதேபோல் கடன்கள் விடயத்திலும் சற்றுக் கவனம் செலுத்துவது நல்லது. சிலருக்கு தந்தைவழி உறவினர்கள் மூலம் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மற்றவர்களுடன் மனவருத்தம் ஏற்படக்கூடும் என்பதால் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# நினைவேந்தலே நிரந்தர மருந்து

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்குப் பயணத்தில் சுகாதாரத்துறைசார் விடயங்கள் கூடுதல் கவனிப்புக்கு உள்ளாகியிருந்தன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு என 3 மாவட்டங்களிலும் மருத்துவமனையின் பிரிவுகள் திறந்துவைக்கப்பட்டன. இதில் மாங்குளம் மருத்துவமனையில் திறந்துவைக்கப்பட்ட மறுவாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி நிலையம் முக்கியமானது. குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது. நெதர்லாந்து அரசாங்கத்தின் ஆதரவுடன் 4 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா செலவில் இந்த மருத்துவ சிகிச்சை நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது வடமாகாணத்தில் உள்ள மிகப் பெரிய மருத்துவ மறுவாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி நிலையம் என்பதோடு மனநல மறுவாழ்வுப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு, ஆய்வுகூடம், கதிரியக்கப் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இந்த மருத்துவமனை வடக்கு மக்களுக்கு அவசியமானது. அதில் மாற்றுக் கருத்தில்லை.

முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்டப்போர் பெரும் துயரத்துடன் நிறைவுக்கு வந்தது. அதன் 15ம் ஆண்டு நினைவேந்தலை அண்மையில்தான் - மே 18 இல் -தமிழர்கள் நினைவு கூர்ந்திருந்தனர். போரில் உயிரிழப்புகளும், உடைமை அழிவுகளும் மாத்திரம் ஏற்படுவதில்லை. அது ஏற்படுத்தி விட்டுச் செல்லும் உளவியல் தாக்கம் மிகப் பெரியது. அது பல ஆண்டுகள் நின்று கொல்லும். இறுதிக்கட்டப்போரில் குடும்பத்தை இழந் தவர்கள் பலர். தங்கள் உறவுகளுக்கு ஒழுங்கான முறையில் இறுதிக்கிரியைகளைக்கூடச் செய்ய முடியவில்லை என ஏங்கிக்கொண்டிருப்பவர்கள் இன்னும் பலர். பல பிள்ளைகள் தங்கள் கண் முன்னாலேயே பெற்றோரை குண்டு வீச்சுகளில் காவு கொடுத்திருந்தனர். இவை எல்லாவற்றுக்கும் அப்பால் போரால் அங்கவீனமானவர்கள், வாழ்நாள் முழுவதும் அதனுடன் வாழவேண்டியவர்கள் எனப் பலதரப்பட்டோர் உண்டு. இதையும் தாண்டிய மிக மோசமான உளவியல் சித்தி ரவதையைக் கொடுக்கும் விடயம் காணாமல் ஆக்கப் பட்டோர் விவகாரமே. போரின் இறுதியில் படையினரிடம் கையளிக்கப்பட்ட தங்கள் அன்புச் சொந்தங்களுக்கு இது வரை என்ன நடந்தது என்பது தெரியாமல் அங்கலாய்க்கும் உறவுகள் இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றனர். இப்படிப் போரின் பல்வேறு பாதிப்புகளையும் சுமந்து நிற்கும் தமிழ் மக்களுக்கு போர் நிறைவுற்று 15 ஆண்டுகளின் பின்னர்தான் அந்த வலிகளுக்கு ஒத்தடம் கொடுக்கும் மருத்துவமனையை சிறிலங்கா அரசாங்கம் திறந்து வைத்திருக்கின்றது.

போர் முடிந்த கையோடு கட்டடங்களையும், வீதிகளையும் அமைத்து, மின்சாரத்தை வழங்கி, ரயிலை ஓடவிட்ட அரசாங்கம், மக்களின் உளக் காயங்களை குணமாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது போரை விடக் கொடியது. உளவியல் துன்பம் என்பது நித்தம் நித்தம் தொடரக்கூடியது. 15 ஆண்டுகளாக அதை ஆற்றுப்படுத்துவதற்கு சிறிலங்கா அரசாங்கம் பாராமுகமாக இருந்ததன் ஊடாக தமிழ் மக்களை இந்த நாட்டுக் குடிமக்களாகக் கருதவில்லை என்பதே வெளிப்படையாகின்றது. இந்த நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து, வடக்கு மாகாணசபை அமைக்கப்பட்டதன் ஊடாக கிடைத்த மிகப் பெரிய விடயங்களில் ஒன்றுதான் இந்த மாங்குளம் மறுவாழ்வு மருத்துவமனை. மாகாணசபையால் அப்போதைய சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்தின் விடாமுயற்சியால் வெளிநாட்டு நிதியில் அமைக்கப்படத் திட்டமிடப்பட்டதுதான் இந்த மருத்துவமனை. வேறுவழியின்றியே சிறிலங்கா அரசாங்கம் நிர்ப்பந்தத்தின் பேரிலேயே அதை அமைத்துக்கொடுத்து இன்று மக்கள் பாவனைக்கு வந்திருக்கின்றது.

போரின் உளவடுக்களை ஓரளவுக்கேனும் ஆற்றுவதற்கே தமிழ் மக்கள் இந்த நாட்டில் 15 ஆண்டுகள் காத்திருக்கவேண்டியிருக்கின்றது. இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும். ஒவ்வொரு வருடமும் தமிழர்கள் எந்தவொரு நினைவேந்தலை நடத்தினாலும் அதற்கு ஏதோவொரு காரணத்தைச் சொல்லி தடைபோடுவதும், நினைவேந்தல் செய்வோரைக் கைது செய்வதும், மிரட்டுவதுமாக இலங்கை அரசாங்கம் தன் பேரினவாத முகத்தைக் காட்டிக் கொண்டே இருக்கின்றது. உளக்காயங்களை நிவர்த்திக்க பல்லாயிரம் கோடி ரூபாக்களைச் செலவிட்டுக் கட்டும் மருத்துவமனைகளை விடவும், போரால் ஏற்பட்ட ஆறாவடுவைச் சுமந்தபடி அந்தரிக்கும் மக்களுக்கு, அவர்கள் விருப்பப்படி கண்ணீர் விட்டு, தீபமேற்றி, மலர்தூவி, கஞ்சி பரிமாறி நினைவேந்த அனுமதிப்பதே மனநலத்தின் உண்மையான மறுவாழ்வுக்கு வழிசமைக்கும். ஆனால் இதை ஒருபோதும் பேரினவாத அரசாங்கம் புரிந்துகொள்ளப்போவதில்லை என்பதே கசப்பான உண்மை.



# காரீய சுரங்க முதலீட்டில் வெளிநாடுகள் போட்டி!

**கொழும்பு, மே 28**

**இலங்கையின் காரீய சுரங்கங்களில் முதலீடு செய்வதற்கு இந்தியா, சீனா, பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிடையே போட்டி ஏற்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.**

இந்தத் தொழில்துறையில் கனடா, அவுஸ்திரேலிய நிறுவனங்கள் ஈடுபட்டுள்ள நிலையில் இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளும் முதலீடு செய்வதற்கான ஆர்வத்தை வெளியிட்டுள்ளன. புவியியல் மற்றும் சுரங்க ஆய்வுப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ரஞ்சித் பிரேமசிறி இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் உயர்தர காரீயம் காணப்படுகின்றது என்று நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். யார் அதிகபட்ச மதிப்புக்கூட்டலில் ஈடுபடுகின்றார்கள், மேம்பட்ட தொழில்துறைகளுக்காகப் பயன்படுத்துகின்றார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இலங்கையில் கைவிடப்பட்ட 3 ஆயிரம் சுரங்கங்கள் உள்ளன-என்றார். (எ-இ)

# மருந்துகளின் தரத்தை சோதிப்பது அவசியம்!



முறையான பதிவுகள் இன்றி நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு தற்போது மருத்துவமனைகளின் பாவனையில் உள்ள மருந்துகளை சோதனைக்குட்படுத்த வேண்டும் என்று மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் பதவிக் காலத்தில் மருந்துகளின் தரம் சரிபார்க்கப்படாது 306 தடவைகள் மருந்துகள் கொண்டுவரப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்த மருந்துகளை சோதனைக்குட்படுத்தாவிட்டால் அவற்றின் மூலம் உயிர்ச் சேதங்கள் ஏற்படலாம் - என்றார். (எ-இ)

# போராட்டத்தில் குதிக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள்!

கொழும்பு, மே 28

சம்பள அதிகரிப்பு உட்படச் சில கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்களும், அதிபர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

எதிர்வரும் 30 மற்றும் 31ஆம் திகதிகளில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சுகவீன விடுமுறையை அறிவித்துப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். (எ-இ)

# 7 யானைகளின் உடல்கள் மீட்பு

பொலநறுவை வெள்ளப் பள்ளத்தாக்கு தேசிய பூங்காவின் ஹந்தபன்வில்லு ஏரியில் ஏழு காட்டு யானைகள் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன. அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் யானைகள் ஓடை,கால்வாயைக் கடக்கும்போது அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

# ஆறுகளின் நீர்மட்டம் உயர்வு

கொழும்பு, மே 28

களனிகங்கை, களுகங்கை, கிங்கங்கை மற்றும் நில்வலா கங்கை ஆகியவற்றின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது இந்த ஆறுகளை அண்டியுள்ள தாழ்வான பகுதிகளில் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டும் என்று இடர்முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் பொறியியலாளர் எச்சரித்துள்ளார். குருநாகல் மாவட்டத்தின் தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தில் நேற்றுக் காலை 4 வான் கதவுகள்திறக்கப்பட்டுள்ளன. குக்குலே கங்கை அனல்மின் நிலைய நீர்த்தேக்கத்தின் வான்கதவுகளும் திறக்கப்பட்டு வினாடிக்கு சுமார் 80 கனஅடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்படுகின்றது. (எ- இ)

## நாளை

29.05.2024

**புதன்கிழமை**

**வைகாசி - 16**

சுபநேரம் : 04.22 - 05.52

ராகுகாலம் : 11.52 - 01.22

## நாளொரு நல்வார்த்தை

**நல்ல குறிக்கோளை அடைவதற்காகத் தொடர்ந்து முயலும் மனிதனின் செயற்பாடே பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் வரலாறாக மாறுகிறது.**

**- கார்ல் மார்க்ஸ்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதித் தேர்தல் நடந்து

# 48 மணிநேரத்துக்குள் நாடாளுமன்று கலையும்?

கொழும்பு, மே 28

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் 48 மணித்தியாலங்களுக்குள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டவுடன் பொதுத்தேர்தலை நடத்தும் நோக்கில் நாடாளுமன்றத்தை கலைக்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

பெரும்பாலும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அந்த வாரத்துக்குள்ளேயே பொதுத் தேர்தலை நடத்தத் திட்டமிடப்பட்டுவருகிறது. அவ்வாறு நடைபெற்றால் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த இன்னும் குறைந்து 135 நாள்கள் மட்டுமே உள்ளன.

அதேவேளை, நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தினால் தற்போது நாடாளுமன்றத்தில் காணப்படக் கூடிய அதிகளவான உறுப்பினர்கள் தோற்பதற்கான வாய்ப்புகளே உள்ளன என்றும், புதுமுகங்கள் நாடாளுமன்றத்துக்கு வரும் வாய்ப்புகள் அதிகமுள்ளன என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

## 'ஹரக்கட்டா' வழக்கு ஜூன் 6 விசாரணை

கொழும்பு, மே 28

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து தப்பிச் செல்வதற்கு முயற்சித்தனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான ஹரக் கட்டா என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்ன என்பவர் உள்ளிட்ட மூவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனக் கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் தமித் தொட்டவத்தவினால் நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான ஹரக் கட்டா என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்ன என்பவர் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## பிழையான தலைவர்கள் வர வாக்களிக்காமையே காரணம்

### விஜயகலா மகேஸ்வரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 28

கடந்த காலங்களில் வாக்களிக்க தவறியமையால் பல பிழையான தலைவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். கோத்தாபய போன்ற கடந்த கால அரச தலைவர்களால் நாடு சோமாலியாவாக மாறியது.

-இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுமக்களுக்கு காணி உறுதிகளை வழங்கியிருந்தார். அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே விஜயகலா மகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தலில் தோற்றபோதும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றார். இன்று அநுர குமார திஸாநாயக்க, சஜித் எனப் பலர் தேர்தலில் போட்டியிட வருகின்றார்கள். அன்று நாட்டைப் பொறுப்பெடுக்கும் வாய்ப்பு இருந்த போது அனைவரும் பின்வாங்கினர். ஆனால் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பெடுத்தார்.

அடுத்த தேர்தலே எனது அரசியல் பயணத்தின் இறுதி தேர்தலாகும். அதன் பின்னர் நான் அரசியலில் இருந்து விலகி விடுவேன் - என்றார். (எ-25-125)

## புதிய அரசியல் கூட்டணி தெற்கில் நேற்று ஆரம்பம்

கொழும்பு, மே 28

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் 'சர்வ ஜன பலய' என்ற பெயரில் புதிய அரசியல் கூட்டணி நேற்று உருவாக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கை அரசியலில் தீவிரமாகவும் சிங்கள-பௌத்தத்தை மையமாகவும் கொண்ட பிரபல அரசியல்வாதிகளை இணைத்துக் கொண்டு இந்தப் புதிய அரசியல் கூட்டணி உருவாக்கப்பட்டிருக்கிறது.

பிவித்துரு ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி, மவ்பிம ஜனதா கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட மேலும் சில அரசியல் கட்சிகள் இந்த கூட்டணியுடன் இணைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, ரொஷான் ரணசிங்க, உதய கம்மன்பில மற்றும் தொழிலதிபர் திலித் ஜயவீர உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டுள்ளனர். (எ-44)

## மருத்துவமனையில் வைகோ!



சென்னை, மே 28

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ தோள்பட்டை முறிவு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வைகோ சற்று உடல்நலம் குன்றி அறுவை சிகிச்சை பெறும் நிலையில் இருக்கின்றார் எனவும் அது தொடர்பில் யாரும் அச்சம்கொள்ளத் தேவையில்லை என்றும் கழகத்தின் முதன்மைச் செயலாளர் துரை வைகோ நேற்றுமுன்தினம் சமூக வலைதளத்தில் பதிவிட்டிருந்தார். இந்தத் தகவல் ம.தி.மு.க. தொண்டர்களிடையே பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியிருந்த நிலையில், வைகோவின் உடல்நிலை தொடர்பில் நேற்று முழுமையான விளக்கம் வழங்கப்பட்டுள்ளது.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வீட்டில் தடுமாறி விழுந்ததில் அவரது தோள்பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து உடனடியாக அவர் சென்னை தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ- ம-100)

## பொதுவேட்பாளர் தொடர்பில் யாழில் கருத்துப் பரிமாற்றம்

### நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு



பொதுவேட்பாளர் தொடர்பில், யாழில் கருத்துப் பரிமாற்ற நிகழ்வொன்று நடத்தப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுவேட்பாளர் தொடர்பிலான முன்னெடுப்புகளை முன்னெடுத்து வரும் சிவில் சமூக பிரதிநிதிகள், பத்தி எழுத்தாளர்கள் உள்ளிட்டவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் என்னை நேரில் சந்தித்துக் கதைத்தார்கள்.

பொதுவேட்பாளர் தொடர்பிலான எனது நிலைப்பாட்டை அவர்களுக்குக் கூறினேன். அவர்களும், பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பிலான தமது கருத்துகளை முன்வைத்த நிலையில், பொதுவேட்பாளர் தொடர்பில் பொதுவெளியில் கருத்துகளைப் பரிமாறும் நிகழ்வை முன்னெடுத்து, அதில் ஆரோக்கியமான கலந்துரையாடலை நடத்துவோம் என்றேன். அதற்கு அவர்களும் சம்மதித்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி மேற்படி நிகழ்வுக்கு ஏற்பாடு செய்துள்ளேன். அதில் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டாமல், மற்றவர்களைத் தாக்கிப் பேசாமல் தமது கருத்துகளை முன்வைத்தால் ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றால் மக்களுக்கும் தெளிவு கிடைக்கும். அதற்காகவே இந்நிகழ்வை ஒழுங்கமைத்துள்ளேன் - என்றார். (ப-125)

## மின் தாக்கி பெண் சாவு

கொழும்பு, மே 28

ஹொரணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அபகஹவத்த பகுதியில் மின்சாரம் தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 78 வயதான இந்தப் பெண், மின்கம்பத்திலிருந்த மின்சாரக் கம்பிகள் தரையில் வீழ்ந்து கிடந்த நிலையில் அந்தக் கம்பிகளில் சிக்கி மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹா கும்பாபிஷேகம்

தெல்லிப்பளை, மே 28

கட்டுவன் மேற்கு, பொதுக்கிணற்றடி அருள்மிகு பேச்சி அம்மன் திருக்கோவிலின் நூதன பிரதிஷ்டா ஏககுண்ட பஷா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா ஆரம்பக் கிரியைகள், பிரதிஷ்டா பிரதம குருக்கள் சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வரக்குருக்கள் தலைமையில் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளன. (ப)

## வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி
## NCDB
**Northern Co - operative Development Bank**

### வழங்குநர் மற்றும் திருத்துநர்களை (இயந்திரம், மின்னியல்) பதிவு செய்தல்

வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியானது வட மாகாணத்தில் கூட்டுறவுத்துறையில் காணப்படும் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கான ஆலோசனைகளை வழங்கி வருகின்றது. அந்த வகையில் அத்தொழிற்சாலைகளில் (தேங்காய் எண்ணெய் ஆலை, அரிசி மா ஆலை, அரிசி ஆலை, குளிரூட்டி அறைகள்) காணப்படும் இயந்திரங்களை திருத்துவதற்கும் புதிய இயந்திரங்களை தயாரித்து வழங்குவதற்குமான வழங்குநர் மற்றும் இயந்திர திருத்துநர்களை பதிவு செய்ய எண்ணியுள்ளது. எனவே பொருத்தமான தகுதியுடையவர்கள் இயந்திர திருத்துநர்கள் பதிவினை மேற்கொள்ளலாம்.

அதே போன்று மேற்படி தொழிற்சாலைகளுக்கு தகுதி வாய்ந்த மின்னியல் தொழில் நுட்பவியலாளர்களும் தங்களை பதிவு செய்து கொள்ளலாம்.

தகுதி வாய்ந்தவர்கள் கீழ்வரும் தொ.பே.இலக்கத்திற்கு அல்லது மின்னஞ்சலுக்கு தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.

**தொ.பே. இல - 0212232673**
**மின்னஞ்சல் - lk.ncdb@gmail.com**

தலைவர்
NCDB

(CR/42507) J-1

## 31 ஆம் நாள் நினைவேந்தலும் நன்றி நவிலலும்



கடந்த 02.05.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சோமசுந்தரம் ஸ்ரீகாந்தரூபன்

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் எதிர்வரும் (31.05.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் துயரில் பங்கு பற்றியவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும் எங்கள் சிரம்தாழ்ந்த நன்றிகள்.

"சமுத்திர தாரா"
சரசாலை வடக்கு, சாவகச்சேரி.
077 323 6039

திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன்
திரு. திருமதி பிரதீபன் ஜானுகா

(cr. 42525) (N-1)

## விலைக் கேள்விக்கான கோரல்
## சபை நிதி - கட்டம் - II
## வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)

1. வலி வடக்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக் குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்வியாளர்கள், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக் கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள் கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை - கொல்லன்கலட்டி, (தொலைபேசி இல: 021-2241130, தொலை நகல் 021-2243688) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.05.28 – 2024.06.11 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையில் சமர்ப்பித்து ரூ.3000.00** மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) 2024.06.12ம் திகதி மு.ப 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி) எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக் கேள்விகள், அவை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் பி.ப 2.30 மணிக்கு 2024.06.04 அன்று நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01 | NP/14/41(14)/05/02/303/CF-12/2024 | வீதி புனரமைத்தல் குழந்தையேசு சனசமூகநிலைய பின் வீதி - இளவாலை வடமேற்கு | 4.300 | 60 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 13.08.2024 | 43,000.00 | Till 10.09.2024 |
| 02 | NP/14/41(14)/05/02/304/CF-13/2024 | வீதி புனரமைத்தல் மாவைகலட்டி இணைப்பு வீதி – கொல்லன்கலட்டி | 2.562 | 60 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 13.08.2024 | 26,000.00 | Till 10.09.2024 |
| 03 | NP/14/41(14)/05/02/305/CF-14/2024 | வீதி அமைத்தல் வள்ளுவர்புரம் குடியேற்றத்திட்ட உள்ளக வீதி - கட்டம்- I வசாவிளான் கிழக்கு | 1.698 | 60 நாட்கள் | C9 & C8 வீதி நிர்மாணம் | 49 நாட்கள் | 30.07.2024 | 17,000.00 | Till 27.08.2024 |
| 04 | NP/14/41(14)/05/02/306/CF-15/2024 | வீதி அமைத்தல் தேவகுலம் கண்ணகி அம்மன்கோவில் வீதி- மயிலிட்டி வடக்கு | 1.280 | 60 நாட்கள் | C9 & C8 வீதி நிர்மாணம் | 49 நாட்கள் | 30.07.2024 | 13,000.00 | Till 27.08.2024 |

**"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VAT மற்றும் வேறுவரிகள்) 50மில்லியனினுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமைமற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) மற்றும் பின்னூட்டல் இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும்.**

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு**
**வலி வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை(கொல்லன்கலட்டி).**
**28.05.2024.**

(cr.42508) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டுகொள்ளப்படாத போராட்டம்: பல்கலை பணியாளர்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் உள்ளிட்ட நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக் கழகங்களில் கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் கடந்த 2ஆம் திகதியிலிருந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

2016ஆம் ஆண்டிலிருந்தே பல கட்டக் கலந்துரையாடல்கள் பேச்சுகள் நடத்தியும், கல்வி அமைச்சுக்கும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் அளவுக்கதிகமான கால அவகாசம் வழங்கப்பட்டும் இதுவரை தீர்வு எதனையும் வழங்காமல் தங்கள் கோரிக்கைகள் மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் அணுகப்படுவதையிட்டுப் பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் கல்விசாரா ஊழியர்கள் கொதிப்படைந்துள்ளனர்.

பல்கலைக்கழகங்களைத் தனியார் மயமாக்கும் செயற்பாட்டின் ஓர் அங்கமே இப் பாராமுகம் என நடுநிலையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் என வடமாகாண தொழிற்சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (ஓ-66)

## பறவைக் காய்ச்சல் கேரளாவில் தீவிரம்

இந்தியாவின் கேரள மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான், அமெரிக்கா, சிலி சில தென்னமரிக்க நாடுகளில் தற்போது பறவைக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது. இந்த நிலையில், இந்தியாவின் கேரள மாநிலத்திலும் தற்போது பறவைக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று இந்திய சுகாதாரத் திணைக்களங்கள் தெரிவித்துள்ளன.

உலகெங்கும் இம்முறை பரவிவரும் பறவைக் காய்ச்சல் தீவிரமான வகையானது என்பதால், மனித உயிரிழப்புகளை ஏற்படுத்தலாம் என்று உலக சுகாதார நிறுவனம் ஏற்கனவே எச்சரித்திருந்தது. இதை மெய்ப்படுத்தும் வகையில் கம்போடியாவில் சிறுவன் ஒருவன் பறவைக் காய்ச்சலால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய பரிபாலன சபை உறுப்பினர் திரு.த.தங்கராசா அவர்களின் அன்பு மாமியார்.

**திருமதி இராசரத்தினம் ஞானசக்தி**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவர்தம் குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.



தோற்றம் 01.02.1937 மறைவு 24.05.2024

**பரிபாலன சபை**
**ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்**
**உரும்பிராய்.**

(CS 597)A-1

## உங்கள் வியாபாரத் திட்டங்களுக்கு முதல் படி

உங்கள் புத்தாக்க, தொழில்நுட்பம் சார் உற்பத்தியை தொழில் நிறுவனமாக்க களம் தேடுகின்றீர்களா?

அல்லது

ஏற்கனவே செயற்படும் உங்கள் வியாபாரங்களை தேசிய, சர்வதேச ரீதியில் விரிவுபடுத்த விரும்புகின்றீர்களா?

அல்லது

வெற்றி பெற்ற தொழில் முயற்சியாளர்களிடம் இருந்து தொழில்நுட்ப, வணிக வழிகாட்டல்களைப் பெற வேண்டுமா?

உங்கள் அனைவருக்கும் ஏற்ற ஒரு தளம், யாழ் கீக் சாலஞ் - 13, இதுவரை இப்போட்டியில் பங்கு பற்றி 75க்கும் அதிகமான வியாபாரங்கள் ஆரம்பிக்கப்பட்டு 600க்கும் அதிகமான வேலை வாய்ப்புக்களை உருவாக்கி உள்ளது. அதில் நீங்களும் ஒருவராகலாம்

விண்ணப்பிப்பதற்கு

**www.yarlithub.org/ygc-senior**

விண்ணப்ப முடிவுத்திகதி - 02 ஜுன் 2024

YARL GEEK CHALLENGE - 2024 SEASON 13

மேலதிக விபரங்களுக்கு
event@yarlithub.org
076 76 73 158

## மரண அறிவித்தல்



மண்ணில் 01.01.1945 — விண்ணில் 26.05.2024

### கந்தையா சுசீலர்

**(ஓய்வு பெற்ற ஆணையாளர் நாயகம் - உள்நாட்டு இறைவரித் திணைக்களம்)**

உரும்பிராயை பிறப்பிடமாகவும், கொழும்பு, அவுஸ்திரேலியா, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுசீலர் நேற்றுமுன்தினம் (26.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவசோதி (Sydney) இன் அன்புக் கணவரும், சிவானி (UK), ஜனனி (Sydney) ஆகியோரின் அன்புத் தந்தையும், டேவிட் இன் அன்பு மாமனாரும், ஈதன், மாயா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கேதாரகௌரி, யோககௌரி, தேவகௌரி மற்றும் கதிரவாசன், தர்மகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவகுமார், ஞானானந்தா, செல்வக்கலை மற்றும் சிவபாலன், சீவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஞ்ஜயன், மாதுஷன் ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும், வர்ணரூபினி, சர்வானந்தா, சர்வானந்தி ஆகியோரின் அன்புத்தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2024) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அரச வீதி,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/596) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 03.08.1947 — மறைவு 27.05.2024

### சிவகாருணியமலர் யோகவனம்

வசாவிளானை பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம் மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகாருணியமலர் யோகவனம் அவர்கள் நேற்று (27.05.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு யோகவனம் அவர்களின் பாசமிகு மனைவியும், திரு யோகவனம் துளசிதரன் (உரிமையாளர் North Cheam Traditional Fish and Chips இலண்டன்) அவர்களின் அன்புத்தாயாரும் திருமதி துளசிதரன் பிரியதர்சினியின் (நடன ஆசிரியர் இலண்டன் ) மாமியாரும் Mellissa, Aron, Chason ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக நாளை (29.05.2024) புதன்கிழமை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள White House parlor ஈம சேவைகள் மையத்தில் வைக்கப்பட்டு பிற்பகல் 3.00 மணி அளவில் தகனத்திற்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 594) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினாதீவு, தில்லைவெளி ஸ்ரீ பிடாரி அம்பாள் ஆலய வருடாந்த திருக்குளிர்த்திப் பொங்கல் வேள்வி விழா, நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் கடந்த சனிக்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது. (ப-66)



யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை முன்னெடுத்த, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வு, சபையின் பிரார்த்தனை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை காலை நடைபெற்றது. (ப-66)



மன்னார் றோட்டரிக் கழகம் மற்றும் கண்டி றோட்டரிக் கழகம் என்பன இணைந்து, செவிப்புலன்களை அறிந்து கொள்ளக்கூடிய அறுபது இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணத்தை, மன்னார் பொது மருத்துவமனைக்கு, அண்மையில் வழங்கியுள்ளன. மன்னார் றோட்டரிக் கழகத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கண்டி றோட்டரிக் கழகத் தலைவர், மன்னார் றோட்டரிக் கழக அங்கத்தவர்கள், மருத்துவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-213)



கந்தபுரம் கிராமஅலுவலர் பிரிவில் இருந்து நெளுக்குளம் கிராமஅலுவலர் பிரிவுக்கு இடமாற்றமாகிச் செல்லும் கிராம அலுவலர் திருமதி லெ.கௌசல்யாவுக்கு பிரியாவிடை நிகழ்வு, கந்தபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ப-18)



நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் 'உதவும் கரங்கள்' அமைப்பினரால், பிரான்ஸ் வாழ் சின்னராசா மோகனராஜனின் நிதிப் பங்களிப்பில், நல்லூரைச் சேர்ந்த பொருளாதாரம் நலிவுற்ற நூறு குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் மேற்படி அமைப்பின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் 'உதவும் கரங்கள்' அமைப்பின் தலைவர் சந்திரசேகரம் இராஜ்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மொத்தமாக இரண்டு இலட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (எ-25-66)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், வருடாந்த வைகாசிப் பெருவிழா, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஓய்வுநிலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ப-66)



யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவால் வலிகாமம் வடக்குப் பிரதேசசபை உத்தியோகத்தர்களுக்கான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு சபை மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்டது. (எ-25-66)



கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு, கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மேலதிக பிரதேச செயலாளர் தலைமையில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது. குறித்த கருத்தமர்வை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மாவட்ட பொறியியலாளர் எந்திரி எஸ். சாரங்கன் மற்றும் அதன் உத்தியோகத்தர் மு.தமிழ்ச் செல்வன் ஆகியோர் முன்னெடுத்தனர். (ப-214)



'தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளில் பவ்ரல் (PAFFRAL) அமைப்பும், மன்னார் மார்ச் 12 இயக்கமும் இணைந்து ஏற்பாடு செய்த மக்கள் மேடை நிகழ்வு மன்னாரில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (எ-25- 56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்கள் ஆணையுடன் ஆட்சிக்கு வரவேண்டும்

## ஜனாதிபதி ரணில் உறுதியாம்

கொழும்பு, மே 28

**மக்கள் ஆணையுடனேயே ஆட்சிக்கு வரவேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார். அதனால் தேர்தல் நிச்சயம் நடைபெறும் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

"தேர்தலொன்று அவசியமில்லை, தற்போதைய ஜனாதிபதியே பதவியில் தொடர வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டார கூறியுள்ளாரே..." என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அவ்வாறு இல்லை, தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் ஆசியுடன் வெற்றி பெறுவதையே ஜனாதிபதி விரும்புகின்றார். தேர்தலில் போட்டியிடவுள்ளதை அடுத்த வாரமளவில் அவரே அறிவிப்பார். ஜனாதிபதித் தேர்தலில் அவர் களமிறங்குவதும், வெற்றி பெறுவதும் உறுதி.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் வருவார்கள். அதற்கான நேரம் வரும். அதுவரை காத்திருப்போம் - என்றார். (எ-44)

# ஐ.தே.க. யோசனை முட்டாள்தனமானது

## சீறும் பெரமுன

கொழும்பு, மே 28

தேர்தல் நடத்தப்படாமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டுமொருமுறை நாட்டை ஆள்வதற்குரிய வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் யோசனை முட்டாள்தனமானது என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தலொன்று அவசியமில்லை, இந்த ஜனாதிபதிக்கே மீண்டுமொருமுறை வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்ற கருத்தை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் முன்வைத்துள்ளனர். இக்கருத்துடன் மொட்டுக் கட்சி உடன்படுகின்றதா?' என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்த விதத்திலும் நாம் உடன்படமாட்டோம். இவ்வாறான யோசனைகள் முட்டாள்தனமானவை. ஜனநாயகம் பற்றி அறிவில்லாத முட்டாள்களே இவ்வாறு கருத்துகளை வெளியிடக்கூடும். உரிய காலப்பகுதிக்குள் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். முன்கூட்டியே தேர்தல்களை நடத்தி விமர்சனங்களுக்கு உள்ளான கட்சியே எமது கட்சி தவிர, தேர்தலை ஒத்திவைத்த கட்சி என்ற குற்றச்சாட்டு கிடையாது. நாட்டில் இன்று மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிசபைகளின் நிர்வாக அதிகாரம் ஜனாதிபதியின்கீழ்தான் உள்ளது. இது ஏற்புடையது அல்ல. ஏதேச்சாதிகாரத்தை நோக்கி பயணிப்பதற்கு வழிவகுக்கக்கூடியது. தேர்தலை பெறுவதற்காக நாம் போராடுவோம் - என்றார். (ஏ-44)

# சமூக ஊடகங்கள் மூலம் திட்டமிட்ட சேறுபூசல்கள்

## எச்சரிக்கின்றார் ஹரின்


கொழும்பு, மே 28

சில சமூக ஊடகங்கள் திட்டமிட்ட அடிப்படையில் சேறு பூசல்களில் ஈடுபட்டு வருகின்றன என்று விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சில சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி கிரிக்கெட் விளையாட்டின் மீது ஆபத்தான சேறுபூசல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சேறு பூசல்களில் ஈடுபடும் சமூக ஊடகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எல்.பி.எல். போட்டித் தொடரின் தம்புள்ள கழகம் தொடர்பிலான சம்பவத்தில் என் மீதும் சனத் ஜயசூரிய மீதும் குற்றம் சுமத்தப்படுகின்றது. விளையாட்டுக் குற்றச் செயல்களைத் தடுக்கும் சட்டத்தை நானே அறிமுகம் செய்தேன். உலகில் எங்குமில்லா வலுவான சட்டம் இலங்கையில் உள்ளது - என்றார். (எ-இ)



# அனவிலுந்தாவ சதுப்பு நிலத்தில் பறவைகள் மர்மமாக மரணம்!

கொழும்பு, மே 28

அனவிலுந்தாவ சதுப்பு நிலத்தில் உள்ள பறவைகள் சரணாலயம் மற்றும் அதன் நீர்நிலைகளில் நூற்றுக் கணக்கான பறவைகள் மற்றும் மீன்கள் கடந்த சில நாள்களாக இறந்து காணப்படுகின்றன என்று அந்தப்பகுதி மக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இறந்த மீன்கள் மற்றும் பறவைகளின் மாதிரிகளை பேராதனை சிறப்பு கால்நடை மருத்துவப் பிரிவுக்கு ஆய்வக சோதனைகளுக்கு அனுப்பி மரணத்துக்கான காரணத்தைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், ஆய்வக பரிசோதனை முடிவுகள் இன்னும் வரவில்லை என்றும் வன பாதுகாவலர் டபிள்யூ.எல். உபநந்தா தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாசிகளை அகற்றாததன் காரணமாக நீர்நிலைகள் மாசுபட்டுள்ளன என்றும், இதன் விளைவாக மீன்கள் மற்றும் பறவைகள் உயிரிழக்கின்றன என்றும் நீர்வள வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள் தெரிவித்தனர். ஆயினும் தொழிற்சாலை கழிவுகள் காரணமாக பறவைகள் உயிரிழந்திருக்கலாம் என்று அந்தப் பகுதி மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (எ-இ)

# இராஜாங்க அமைச்சர்கள் இருவரிடையே கைகலப்பு!

கொழும்பு, மே 28

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இராஜாங்க அமைச்சர்களான பிரசன்ன ரணவீர மற்றும் லொஹான் ரத்வத்த ஆகியோரிடையே சிறு கைகலப்பு ஏற்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த வாரம் திங்கட்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான இரவு விருந்துபசாரம் ஒன்றிலேயே கைகலப்பு ஏற்பட்டுள்ளது என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் அண்மையில் குழப்பத்தை ஏற்படுத்திய ரணவீரவின் செயற்பாடு தொடர்பாக லொஹான் கேள்வி எழுப்பியதை அடுத்தே முரண்பாடு ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது.

இந்தச் செயல் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவமானம் என்று லொஹான் ரத்வத்த கூறியுள்ளார். பதிலுக்கு ரணவீர, அநுராதபுரம் சிறைச்சாலையில் ரத்வத்த கைத்துப்பாக்கியைக் காட்டி கைதியை மிரட்டிய சம்பவத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். அதையடுத்து இருவரிடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்புவரை சென்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

# வனுவாட்டு தீவில் நில நடுக்கம்

கொழும்பு, மே 28

பசுபிக் பெருங்கடலின் தெற்கேயுள்ள ஓசியானியாப் பகுதியில் அமைந்துள்ள வனுவாட்டு தீவில் சக்தி வாய்ந்த நில அதிர்வு உணரப்பட்டுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நில அதிர்வு ரிக்டர் அளவுகோலில் 6.4 மெக்னிடியூட்டாகப் பதிவாகியுள்ளது என்று ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

வனுவாட்டு தீவின் தலைநகரான போர்ட் விலாவுக்கு வடமேற்குப் பகுதியில் இருந்து 83 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கடற் பகுதியில் இந்த நில அதிர்வு, மையம் கொண்டிருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நில அதிர்வு சுமார் 29 கிலோமீற்றர் ஆழத்தில் உணரப்பட்டுள்ள நிலையில் சுனாமி தொடர்பிலான எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# இலங்கையர்களை மீட்பதற்கு மியான்மர் சென்ற எதிர்க்கட்சி

மியான்மரில் இணையவழி குற்ற முகாம்களில் சிக்கியுள்ள இலங்கையர்களையும், ரஷ்ய உக்ரைன் போர் முனையில் சிக்கியுள்ள இலங்கைப் படையினரையும் மீட்கும் நோக்கில் மூன்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தாய்லாந்துக்குப் பயணமாகியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான வசந்த யாப்பா பண்டார, ஜே.சி. அலவத்துவல மற்றும் சுஜித் சஞ்சய பெரேரா ஆகியோரைக் கொண்ட தூதுக்குழுவே நேற்று அதிகாலை தாய்லாந்துக்குச் சென்றுள்ளது.

இந்தக் குழுவானது பாதிக்கப்பட்ட இலங்கையர்களை மீட்பதற்கும் அவர்களை நாட்டுக்கு அழைத்து வரவும் இராஜதந்திரிகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மூன்றாம் தரப்பினருடன் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளது. இந்தக் குழுவினர் மியான்மர் மற்றும் ரஷ்யாவில் தலா ஐந்து நாள்கள் தங்கியிருக்கவுள்ளனர்.

அதேவேளை, தமது பயணத்தின் போது, தாய்லாந்து மற்றும் மியான்மரின் சங்க நாயக்க தேரர்கள் மற்றும் இராஜதந்திர அதிகாரிகளையும் சந்தித்து மகாநாயக்க தேரர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கைகள் அடங்கிய கடிதங்களையும் கையளிக்கவுள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*1,700 ரூபா ஊதிய விவகாரம்;*

# அரசாங்கத்தின் உத்தரவால் பொருளாதாரம் சீர்குலையும்!

## முதலாளிமார் சம்மேளனம் எதிர்ப்பு

கொழும்பு, மே 28

தேயிலை மற்றும் இறப்பர் துறையில் தொழில்புரியும் தோட்டத்தொழிலாளர்களின் சம்பளத்தை முன்னெப்போதும் இல்லாத வகையில், அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய உயர்த்தினால் நாட்டின் பொருளாதாரம் சிதிலமடையும் என்று பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா ஊதியத்தை வழங்க முடியாவிட்டால் தோட்டங்களைவிட்டு வெளியேறுமாறு, பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் முதலாளிமார்களுக்கும் ஜனாதிபதி ரணில் உத்தரவிட்டுள்ளதுடன், இதுதொடர்பில் மேலதிக நடவடிக்கைகளைக் கண்காணிக்குமாறும் அவர் தனது குழுவினரை அறிவுறுத்தியுள்ளார்.

இந்த நிலையிலேயே, ஆயிரத்து 700 ரூபா ஊதிய உயர்வு என்பது முன்னெப்போதும் இல்லாத நடைமுறை. இது நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் நாடு பொருளாதாரச் சீர்குலைவைச் சந்திக்கும் என்று பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் அறிவித்துள்ளது.

"தொழிற்றுறையில் உள்ள அனைத்துப் பங்குதாரர்களின் நலன்கள்மீது எந்த அக்கறையும் இல்லாமல் அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது. எந்த நன்மையையும் தராத இந்தத் தீர்மானமானது, இந்நாட்டின் தேயிலை மற்றும் இறப்பர் கைத்தொழிலின் ஒவ்வொரு துறையையும் மேலும் பலவீனப்படுத்தும் என்பது எமது நம்பிக்கை. சிறு தேயிலைத் தோட்ட மற்றும் இறப்பர் தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களை நிர்ப்பந்திக்கும் இந்த தற்போதைய முயற்சியானது, தொழிற்றுறையின் அடிப்படை செயற்பாட்டுத் தேவைகளைக் குறைக்கும். அத்துடன், இத்தகைய நியாயமற்ற சம்பள உயர்வை ஏற்றுக்கொள்ளமுடியாது" என்றும் பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

### ஜனாதிபதித்...

துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தேர்தல் நடத்தப்படும் காலப்பகுதி தொடர்பில் அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தத் திகதியின் அடிப்படையில் கட்டாயம் தேர்தல் நடத்தப்பட்டாகவேண்டும். அந்தவகையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும்.

நிலைமை இவ்வாறு இருக்கையில், சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி, தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடிக்கவேண்டும் என்பதான தகவல் பரப்பப்படுகின்றது. தற்போதைய ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை இல்லை. கோத்தாபயவின் எஞ்சிய பதவிக் காலத்துக்காகவே நாடாளுமன்றம் ஊடாக அவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன நாடாளுமன்றத்தின் ஆயுள்காலத்தை நீடித்துக்கொள்வது சம்பந்தமாகவே சர்வஜன வாக்கெடுப்பை நடத்தியிருந்தார். மாறாக ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு அல்ல. எனவே, இவை இரண்டையும் குழப்பிக் கொள்ளகூடாது" - என்றார். (அ-ம-44)

### கத்திமுனையில்...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

குறித்த வீட்டின் ஜன்னல் கம்பிகளை நெளித்துவிட்டு உள்நுழைந்த ஐந்து கொள்ளையர்கள் தம்மைப் பொலிஸார் என்று அடையாளப்படுத்தினர். அவர்கள் பொலிஸார் அணியும் ரீ ஷேர்ட்டை அணிந்திருந்தனர். பின்னர் வீட்டின் குடும்பத்தலைவரை விசாரிக்கவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதைத் தொடர்ந்து கணவன், மனைவி இருவரினதும் கைகளைக் கட்டிவைத்துவிட்டு, கழுத்தில் கத்திவைத்து வீட்டிலுள்ள பணம், நகை என்பவற்றை எடுத்துத் தருமாறும் இல்லையேல் அவர்களுடைய 14 வயது மகனைக் கொன்றுவிடுவோம் என்றும் மிரட்டினர். பின்னர் ஒரு தொகைப் பணம் மற்றும் வீட்டில் இருந்த இரண்டு மோட்டார்சைக்கிள்கள் என்பன கொள்ளையர்களால் கொள்ளையிடப்பட்டன. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்ட நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். தடயவியல் பொலிஸாரும் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டனர். கொள்ளையர்களால் எடுத்துச் செல்லப்பட்ட மோட்டார்சைக்கிள் ஒன்று எரிபொருள் தீர்ந்த நிலையில், அதை அவர்கள் கைவிட்டுவிட்டுச் சென்றுள்ளனர். இதையடுத்து அந்த மோட்டார்சைக்கிள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. (ம-35-19)

### புலமைப்...

செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்படவுள்ளது. இந்த நிலையில், பரீட்சைக்கான இணையவழி ஊடான விண்ணப்பங்கள் நேற்றுத் திங்கட்கிழமை முதல் பரீட்சைகள் திணைக்களம் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ளது.

விண்ணப்பங்களை ஜூன் மாதம் 14ஆம் திகதி வரை இணையவழி ஊடாகச் சமர்ப்பிக்க முடியும் எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. எந்தவிதக் காரணங்களுக்காகவும் விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது எனவும் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ-ம-66)

### ஜூன்...

தற்போது ஏழு கட்டங்களாக இடம்பெற்று வருகின்றது. ஆறு கட்டத் தேர்தல் முடிவடைந்துள்ள நிலையில், ஏழாம் கட்டத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றிபெறும் பட்சத்தில் ஜனாதிபதி ரணில் ஜூன் மத்திய பகுதியில் இந்தியாவுக்குச் செல்வதற்கு வாய்ப்புகள் உள்ளதாகக் கருதப்படுகின்றது.

எதிர்க்கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார கடந்த சில வாரங்களுக்கு முன்னர், ஐந்து நாள்கள் பயணம் மேற்கொண்டு இந்தியாவுக்குச் சென்று அங்கு முக்கியமான பல சந்திப்புகளில் ஈடுபட்டிருந்தார். இது பல்வேறு கேள்விகளையும் சந்தேகங்களையும் தூதரகரீதியில் ஏற்படுத்தியிருந்த நிலையிலேயே, ரணிலின் இந்தியப் பயணம் திட்டமிடப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. (அ-ம)

### ஸ்டார்...

னான சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்டார் லிங்க் இணைய சேவை கொழும்புக்கு வெளியேதான் வழங்கப்படும். தற்போது புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் செயற்பாடு மட்டுமே மீதமுள்ளது. மிகுதி அனைத்து ஏற்பாடுகளும் முழுமை செய்யப்பட்டுள்ளன - என்று ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-6)

### மோ.சைக்கிள்...

இடம்பெற்றது. சம்பவம் நடைபெற்றபோது அந்த இடத்தில் நின்றவர்கள், காயமடைந்த இளைஞனை சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் குறித்தநபர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் எனக் கூறியுள்ளார். இளைஞனின் சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.

குறித்த இளைஞர் கனடாவுக்குச் செல்வதற்கான விசா கிடைத்து பயணப்படவிருந்த நிலையிலேயே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார் என்று ஊர்மக்கள் தெரிவித்தனர். (அ-ப-9-66-131)

### மாவை...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக் கட்சி தொடர்பான வழக்கில் சிறீதரன் மற்றும் மாவை சேனாதிராஜா இடையே வெவ்வேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. கட்சியின் சார்பாக 7 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் நான் உள்ளிட்ட மூவர் ஒரே நிலைப்பாட்டுடன் செயற்படுகின்றோம். ஆனால், மீதமுள்ள 4 பேரும் இரு தரப்பாகப் பிரிந்து வெவ்வேறு நிலைப்பாடுகளுடன் செயற்படுகின்றனர். இதனை மத்திய செயற்குழுக் கூட்டத்தில் எடுத்துரைத்தேன். கட்சியின் முன்னணி அங்கத்தவர்கள் யாப்பை தெரியாததுபோல் நடந்துகொள்வது தொடர்பிலும் விளக்கமளித்தேன் - என்றார். (அ-ம-20)

### அரச...

இறுதியாக 2016ஆம் ஆண்டு அரச அலுவலர்களைக் கணக்கெடுக்கும் பணி நடைபெற்றது. 2016ஆம் ஆண்டு மொத்தமாக பதினொரு இலட்சம் அரச அலுவலர்கள் சேவையில் இருந்தனர். மத்திய, மாகாண சேவைகளிலுள்ள நிரந்தர, தற்காலிக ஊழியர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரும் இந்த பதினொரு இலட்சம் பேரில் அடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-6)

### தமிழர்...

பேராசிரியர் பத்மநாதனின் 'ஒரு மறைந்துபோன நாகரிகத்தின் தரிசனம் ஆதிகால யாழ்ப்பாணம்' நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியத்தின் உற்பத்திக்கு அடிநாதமாகக் காணப்படும் மொழிவழக்கும், இடையறாத நிலப்பரப்பும் கிறிஸ்துவுக்கு முதல் நூற்றாண்டிலேயே உருவாகிவிட்டது. இலங்கைத் தமிழர்களினதும், சிங்களவர்களினதும் முன்னோர்கள் நாகர்களின் வழிமுறைச் சந்ததியினரே.

19ஆம் நூற்றாண்டில் சுதந்திரம் கிடைத்த பின்னர் சிங்களத் தலைவர்கள், படித்தவர்கள், அரச சட்டசபையில் (ஸ்டேட் கவுன்ஸில்) இருந்தவர்கள், பக்குவமான குடும்பத்திலிருந்து வந்தவர்கள், தமிழர்கள் ஒரு தேசிய இனம். ஆதலால், நாட்டில் ஒரு சமஷ்டி முறையிலான ஆட்சி அமையவேண்டும் என்றார்கள். நாங்கள் என்ன செய்தோம்? எட்டியும் பார்க்கவில்லை. இப்போது என்ன சொல்கின்றோம்? ஒஸ்லோ பிரகடனத்தில் எழுதப்பட்டுள்ளது என்கின்றோம். எங்களுடைய கோமாளித்தனம் தொடர்ந்து வந்ததனால் எங்கள் இருப்புக்கே பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

15 இலட்சம் தமிழர்கள் உள்ளனர். ஆனால்,17 கட்சிகள் உள்ளன. மலையகத்தில் உள்ள கட்சிகளுடன் சேர்த்தால் 24 கட்சிகள். இவற்றைக் கொண்டு எங்கே போகப்போகின்றோம்?

நாங்கள் தற்போது என்ன செய்யவேண்டும் என்றால், எமது இருப்பைப் பாதுகாப்பதற்கு என்னென்ன நிறுவனங்கள் உள்ளனவோ தற்போதைய அரசமைப் பின்படி என்னென்ன நிறுவனங்களுக்கு என்ன அதிகாரம் உள்ளதோ அவற்றை பயன்படுத்தி இயக்கவேண்டும்.

அவற்றின் மூலம் இந்த ஆவணங்களை தேடவேண்டும், தேடிப் பாதுகாக்க வேண்டும், அருங்காட்சியகங்களை அமைக்க வேண்டும், காட்சிப்படுத்தவேண்டும், மீண்டும் எங்களின் தேசிய உரிமையை, எழுச்சியை வளர்க்கவேண்டும்.

சர்வதேசரீதியாகவும் சிங்கள மன்னர்களின் ஆட்சி வழக்கின்படியும், தமிழ் மக்களின் அரசுகள், பிராந்தியங்கள் தனித்துவமானவை. அரசுரிமையில் இறைமையில் பங்குள்ளவை என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம். இதுபற்றி எங்களுடைய துறையில் உள்ளவர்கள்தான் அடக்கிவாசிக்கின்றார்கள். உள்ளதைச் சொல்வதற்குப் பயப்படக்கூடாது.

ஒன்றுமட்டும் சொல்கின்றேன். தமிழீழம் என்ற பேச்சுக்கு இடமில்லை. எந்த ஒரு நாடும் ஆதரிக்காது. இந்த யுகத்தில் ஒருவராலும் அமைக்க முடியாது - என்றார். (அ-ம)

### பிரான்ஸின்...

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். கடந்த 2022ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரான்ஸ் தூதுவராக பிராங்கோயிஸ் பணியாற்றிவந்தார். அவருடைய மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ள இலங்கை, இந்த விடயத்தில் முடியுமான அத்தனை உதவிகளையும் வழங்கத் தயார் என்றும் தெரிவித்துள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கை நுண்ணறிவு மிகப்பெரும் ஆபத்தே!

## எலான் மஸ்க் எச்சரிக்கை



செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மனித குலத்துக்கு எதிர்காலத்தில் மிகப் பெரும் ஆபத்தாக உருவெடுக்கும் என்று உலகப் பணக்காரரான எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸின் தலைநகர் பரிஸில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு அங்கு உரை யாற்றும்போதே எலான் மஸ்க் இவ்வாறு தெரிவித்துள்ளார். செயற்கை நுண்ணறிவின் அதிதுரிதமான வளர்ச்சி காரணமாக வருங்காலங்களில் எம்மில் யாருக்கும் வேலை இருக்காது. அதன்படி தற்போது மனித குலத்தின் பெரும் எதிரியாக செயற்கை நுண்ணறிவே காணப்படுகின்றது. பொழுதுபோக்குக்காக வேண்டுமானால் ஏதேனும் ஒரு வேலையை நாம் செய்யலாம். மற்றபடி எங்களுக்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் வழங்கிவிடும் என்று எலான் மஸ்க் சுட்டிக்காட்டினார்.

கணினிகள் மற்றும் ரோபோக்கள் உங்களை விட எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்ய முடிந்தால், உங்கள் வாழ்க்கைக்கு அர்த்தம் உள்ளதா? சமூக ஊடகங்கள், மனித மூளையில் சுரக்கும் டோபோமைனை செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின்மூலம் அதிகப்படுத்தும் யுக்தியைக் கையாளத் தொடங்கியுள்ளன. ஆதலால், குழந்தைகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் எலான் மஸ்க் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம)



# சர்வதேச நீதிமன்றின் தீர்ப்பு: இஸ்ரேல் கண்டுகொள்ளாது!

## பலஸ்தீன தொண்டு நிறுவனங்கள் தெரிவிப்பு

**காஸா, மே 28**

**காஸாவில் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படவேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், அந்தத் தீர்ப்பை இஸ்ரேல் கண்டுகொள்ளாது என்று பலஸ்தீன தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.**

காஸாவிலும், ராபாவிலும் இஸ்ரேல் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பிலும், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு மற்றும் ஹமாஸின் தலைவர் சின்வார் உள்ளிட்டவர்களுக்குப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை தொடர்பிலும் சர்வதேச நீதிமன்றம் நேற்றைய அமர்வில் விவாதித்தது. இதன்போது, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ராபாவில் போர் நிறுத்தம் செய்யப்படவேண்டும், காஸாவில் அமைதி திரும்ப வேண்டும், அத்துடன் சர்வதேச கண்காணிப்பாளர்களின் நடவடிக்கைக்கு ராபாவில் இடமளிக்கப்படவேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டது. நீதிமன்றத்தின் இந்த உத்தரவுகளுக்கு சர்வதேச நாடுகள் பலவும் வரவேற்பைத் தெரிவித்துள்ள நிலையில், இந்த உத்தரவுகள் நடைமுறைப்படுத்தப்படும் என்ற நம்பிக்கை தமக்கில்லை என்று பலஸ்தீன தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலின் போர்க் குற்றங்கள் தொடர்பில் தென்னாபிரிக்கா தொடர்ந்த வழக்கில் சர்வதேச நீதிமன்றம் ஏற்கனவே ஓர் உத்தரவைப் பிறப்பித்துள்ளது. ஆனால், அந்த உத்தரவால் எந்தப் பயனும் இல்லை. எனவே, இந்த மறு உத்தரவு நடைமுறைப்படுத்தப்படும் சாத்தியம் தொடர்பில் நம்பிக்கையற்ற தன்மையே உள்ளது என்று பலஸ்தீன தொண்டு நிறுவனங்களின் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளன.

(ம)

வங்கி மீதி வசதிகள்
மற்றும்
விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 173 7684
(CS/5891) J-1

இரு வீடுகள் வாடகைக்கு உண்டு

- நல்லூர் கோவிலில் இருந்து 200m தூரத்தில் நான்கு அறைகளைக் கொண்ட வீட்டின் மேற்பகுதி **வாடகைக்கு உண்டு.**
- முற்பணம் : 300000/- மாதவாடகை : 35000/-
- புனித பொஸ்கோ பாடசாலையில் இருந்து 300m தூரத்தில் **வீடு வாடகைக்கு உண்டு.**
- முற்பணம் : 500000/- மாதவாடகை : 80000/-

077 306 8993
(CS/55199) J-1

# முழுமையான போர்நிறுத்தம்: அதிபர் புடின் தயாராம்!



மொஸ்கோ, மே 28

உக்ரைனில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி, ரஷ்யத் தாக்குதல்களை பூச்சிய நிலைக்குக் கொண்டுவருவதற்கு புடின் தயாராக உள்ளார் என்று கிரம்ளின் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முயற்சிகளைத் தொடர்ந்து, உக்ரைனுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை அறிவித்தார் புடின். இரண்டு ஆண்டுகளாக இந்தப் போர் இடம்பெற்று வருகின்றது. உக்ரைனின் பல பகுதிகள் ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், உக்ரைன் தொடர்பான உச்சிமாநாட்டை நடத்தி அங்கு அமைதியை வலியுறுத்துவதற்கு சுவிற்சர்லாந்து நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ரஷ்யா இந்த உச்சிமாநாட்டில் அழைக்கப்படவில்லை என்பதால், ரஷ்யாவின் கருத்துகளைக் கண்டு கொள்ளாமல் தீர்மானங்கள் எடுக்கப்படவே கூடுதல் சாத்தியங்கள் உள்ளன.

ஆதலால், உச்சி மாநாட்டுக்கு முன்பாக உக்ரைனே போரைத் தொடர்வதாக ஒரு விம்பத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை ரஷ்யாவுக்கு இருப்பதாக உணரப்பட்ட பின்னணியிலேயே, போர் நிறுத்தம் தொடர்பான அறிவிப்பை ரஷ்ய அதிபரின் இல்லமான கிரம்ளினின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவின் கருத்துகளை செவிமடுத்து, ரஷ்ய நலன்களையும் பாதுகாக்கும் வகையிலான பேச்சுக்கு அதிபர் புடின் தயாராகவே இருக்கின்றார்.

ஆனால் மேற்கு நாடுகள் ஒரு பக்க நலன்களைக் கருத்திற்கொண்டு பேச்சுகளைச் சீர்குலைக்கின்றன என்று கிரம்ளினின் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(ம)

மரண அறிவித்தல்

திருமதி வரதராஜா வள்ளிநாயகி



பிறப்பு 04.10.1943 இறப்பு 27.05.2024

சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும் அரியாலை, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரதராஜா வள்ளிநாயகி (27.05.2024) நேற்று திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமி கந்தையா-முத்தம்மா தம்பதியரின் பாசமிகு இளைய புதல்வியும் காலஞ்சென்றவர்களான அரியாலையூர் கனகசபை அன்னம்மா தம்பதியரின் மூத்தமருமகளும் வரதராஜாவின் (ஓய்வுபெற்ற இ.போ.ச.உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், சுரேஷ் (சுவிஸ்), சுனித்தா (அவுஸ்ரேலியா), சுபானி (லண்டன்), ஆகியோரின் அன்புத்தாயாரும் சசிலேகா (சுவிஸ்), யோகேஸ்வரன் (அவுஸ்ரேலியா), தயாபரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிவசுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான தனலட்சுமி, நடராஜா, சங்கரப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரியும், சாரிகா, நிர்சனா, சஞ்ஜெயன், துர்க்கா, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கந்தசாமி, சிவபாலசிங்கம் (துரை), நாகேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2024) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணியளவில் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
076 562 9969
(CS 598) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.